அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண்:41/2016
தேதி : 17/02/2016

# அரசு ஊழியர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு சமக நிறுவனர் - தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ வேண்டுகோள்

தமிழகத்தில் அரசு ஊழியர்கள் ஓய்வூதியம் உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, 7 வது நாளாக போராட்டம் நடத்தி வருகிறார்கள். தமிழக நிதி அமைச்சர் நே.ஆ.ஆற்று சமர்ப்பித்த இடைக்கால நிதி நிலை அறிக்கையில் அரசு ஊழியர்கள் கோரிக்கை தொடர்பான அறிவிப்புகள் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி மேலும் போராட்டத்தை தீவிரப்படுத்தி வருகிறார்கள்.

அரசு இயந்திரம் சிறப்பாக இயங்குவதில் அரசு ஊழியர்களின் பங்கு மிக அவசியம். சட்டமன்ற பொதுத் தேர்தல், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் பொதுத் தேர்வுகள், வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதல் போன்ற அத்தியாவசியப் பணிகள் இருக்கக் கூடிய காலகட்டத்தில், அரசு ஊழியர்கள் தொடர்ந்து போராடி வருவது அரசுப் பணிகளில் முடக்கத்தை ஏற்படுத்தும். எனவே தமிழக அரசு, அரசு ஊழியர் சங்க பிரதிநிதிகளோடு உடனடியாக கலந்து பேசி அவர்களது நியாயமான கோரிக்கைகளை பரிசீலித்து நிறைவேற்றித் தர வேண்டும் என்றும், அரசு ஊழியர்களின் தொடர் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்